SRI N. K. PALANISAMI : ஸார், ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் பிரகாரம் ஏதாவது ஒரு தொழிற்சாலையில் தகராறு ஏற்பட்டு அந்த தகராறு தொழில் கோர்டில் இருக்கும்போது வேறு ஏதாவது புதிய பிரச்னைகள் எழுந்தால் அதை பரிசீலிப்பதற்கு தொழிலாளர்களுக்கு கோர்டுக்கு போவதற்கு இருந்த உரிமையை ரத்து செய்வதற்கு காரணம் என்ன? அந்த உரிமை தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக இருப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ? அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தச் சட்டத்தின் 5–வது, 6–வது செக்ஷன் எல்லாம் "அல்ட்ரா வைரிஸ்" என்று ஹைகோர்ட்டில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் 10–வது செக்ஷன். 1956–வது ஆண்டில் மத்திய பார்லிமெண்டால் மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு மத்திய சர்க்காரின் சட்டத்திற்கு விரோதமாக ராஜ்ய சர்க்கார் ஒரு சட்டத்தை இயற்றி வைத்துக்கொண்டிருக்க முடியாது. அவ்விதம் ராஜ்ய சர்க்காரின் சட்டம் இருந்தால் அது செல்லுபடியாகாது. ஆகவே தான் இதை நாம் "ரிப்பீல்" பண்ணுவதற்கும் அவசியமில்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஸார், நம்முடைய ராஜ்யத்திலுள்ள சில முதலாளிகள், தங்கள் கீழ் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் ஒரு சிறிய குற்றம் செய்தாலும் ஒரு தீர்ப்பை அடிப்படையாக வைத்துக் கொண்டு தொழிலாளர்களை பழி வாங்கி வருகிறார்கள். மேலும் சில கோர்ட்டு தீர்ப்புகள் தொழிலாளர்களுக்கு சாதகமாயும் முதலாளிகளுக்குப் பாதகமாயுமிருந்தால் உயர்நீதி கோர்ட்டுகளில் 'ரிட்' போட்டு தடைசெய்து விடுகிறார்கள். இதைத் தவிர்த்து தொழிலாளர்களுக்கு வசதி செய்ய திருத்தஞ் செய்யுமாறு இந்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : That is a separate question. How does it arise from this question?

SRI S. PAKKIRISAMI PILLAI : It is about the Industrial Disputes Act, Sir.

MR. SPEAKER : No. It is about the repeal of the Industrial Disputes (Madras Amendment) Act, 1949. The Hon. Member is asking about something else. So, I rule the question out of order.

SRI J. MATHA GOWDER : ஸார், இதுபோன்ற தொழில் தகராறு ஏற்படுகின்ற சமயங்களில் ஹைகோர்ட்டிலிருந்து வேறு விதமாக தீர்ப்பு அளிக்கப்படுகின்ற காரணத்தால் இந்த சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது அரசியல் சட்ட சாஸன உரிமை. ஹைகோர்ட்டுக்குள்ள உரிமைகளை எல்லாம் நாம் சட்டம் செய்து விடுவதினால் எடுத்து விட முடியாது.

SRI M. KALYANASUNDARAM: இப்போது வாபஸ் பெறப்பட்டிருக்கும் சட்டத்தின் கீழ் ஏதாவது பிரச்னை கோர்ட்டுக்கு வந்தபோது இது செல்லுபடியாகாது என்று அபிப்பிராயம் கூறப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்முடைய இலாகாவினர் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

Payment of Wages Act

* 528 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of industries in which the provisions of the Payment of Wages Act are implemented?

3rd March 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : The Payment of Wages Act, 1936 applies to the following industries in this State :

1. Factories covered by sections 2 (n) and 85 of the Factories Act, 1948.

2. Tramway or Motor bus Services.

3 Plantations.

4. Mines, other than coal mines.

SRI N. K. PALANISAMI : ஸார், பாக்கியிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் இந்த சட்டத்தை விஸ்தரிக்க சர்க்கார் ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். படிப்படியாக விஸ்தரிக்கப்படும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: ஸார், நிலங்களில் வேலை செய்யும் விவசாயக்கூலிகள் (அதாவது அத்தக்கூலிகள்) விவசாயத்தில் வேலை செய்யும் தினக் கூலிகளுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டு வர பரிசிலனைக்கு உடையதாகத்தெரிகிறது. அதை சீக்கிரமாக கொண்டு வருவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்து விவசாயிக் கூலிகட்கு சீக்கிரம் சட்டம் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சக்கூலி நிர்ணயம் விவசாயத் தொழிலாளர்களுக்கும் 1959-ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் கொண்டுவரப்படும்.

SRI A. GOV NDASAMY : தலைவர் அவர்களே, பனியன் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் கொடுக்கப்படுவதற்கு ஒரு சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கெல்லாம் தனித்தனியாகச் சட்டம் தேவையில்லை. குறைந்த பட்சக் கூலி நிர்ணயத்தின் அடிப்படையில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

Disputes concerning the catering establishments

* 529 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of disputes that arose in the catering establishments in (i) the State and (ii) the City after the Catering Establishments Act, 1958, has come into force?

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras Catering Establishments Act, 1958, has not yet been brought into force as the rules have not been finalised. Hence the question does not arise.

Madras Shops and Establishments Act

* 530 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government had issued any notification exempting temporarily for one year with effect from 1958 all establishments from the provisions of Chapters II to VI and section 31 of Chapter VII of the Madras Shops and Establishments Act, 1947 (Madras Act XXXVI of 1947);